# திருவெங்கையுலா

[உலா என்பது, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்னும் எழுவகைப்பருவ மாதர்களும் கண்டு காதல்கூரும் வண்ணம் தலைவன் ஒருவன் தெருவில் உலாவந்தான் என்று கலிவெண்பாவாற் பாடப்படுவதாகும். உலாவின் தொடக்கத்தில் பாட்டுடைத் தலைவனுடைய சிறப்பு, நீராடல், அழகு செய்துகொள்ளல், உறுதிச் சுற்றம் புடைசூழத் தன் ஊர்தியில் ஏறித்தெருவில் வருதல் என்னுமிவை கூறப்படும். இவ்வுலாநூல் உலாப்புறம் எனவும் பெயர் பெறும். பாட்டுடைத் தலைவனுடைய இயற்பெயர் கூறப்படுகிறபடியாலும், அவனைக் கண்டு மாதர்கள் காமுற்றதாகக் கூறுவதல்லாமல் அம்மாதர்களைப் பார்த்துப் பாட்டுடைத் தலைவன் காமுற்றதாக எங்குங் கூறப்படாமை யானும் இது புறப்பொருளைச் சார்ந்த பெண்பாற் கைக்கிளையாய்ப் பாடாண் திணையுள் அடங்கும். இதனால் இதற்கு உலாப்புறம் என்னும் பெயரும் வழங்கலாயிற்று. இவ்வுலாநூலைப் புலவர்கள் தம்மைப் பேணிய அரசர்கள் மீதும் கடவுளர் மீதும் அறிவாசிரியர்கள் மீதும் பாடுவது வழக்கமாக இருக்கிறது. நமது தமிழ் மொழியில் திருக்கைலாயஞானவுலா முதலிய பல உலாநூல்கள் உள்ளன. இவ்வுலாநூல் திருவெங்கையில் எழுந்தருளிய சிவபிரான் மீது பாடப் பெற்றது.]

## காப்பு

## நேரிசை வெண்பா

நாவலர்தம் வாய்வீதி நாளு முலாவருமே
தாவருநம் வெங்கையிறை தன்னுலாப் - பாவெனுமோர்
அம்பொற் றளைபூண வாழத் தகப்பட்ட
கும்பக் கடாக்களிற்றைக் கொண்டு.

## தலவிசேடம்

1 பூமேவு செம்மற் புகழ்வடிவங் கொண்டன்ன
பாமேவு மங்கைபுகழ் பண்பினான் - ஏமேவு
வில்லிற் கருந்தடங்கண் மேவுஞ் சிறியநுதல்
வல்லிக் கிடங்கொடுத்த வண்மையினான் -அல்லிமலர்
யாணர்த் தவிசி னெகினவர சின்றளவுங்
காணக் கிடையாத கங்கையான் - மாணப்

பொருவரிய பூங்கட் பொறியரியாற் சென்று
மருவரிய நற்றாண் மலரான் - விரவுசடைக் (1)

(காப்பு) தா அரும்-கெடுதலற்ற. ஆழத்தகப்பட்ட பிள்ளையார் என்பது தலப்பிள்ளையார் பெயர். 1.0-5.

கானிருக்க விவ்வீர்ங் கதிர்க்கியைபென் னென்றுமறி
மானிருக்குங் கைத்தா மரையினான் - யானிருக்குங்
காயத் திருப்பதுபுன் காரேனக் கொம்போவென்
றேயப் பிறையிருக்கு மீர்ஞ்சடையான் - தூயமுக்
கண்ணுமெழின் மூக்கொடுவார் காம்புபுணர் கூவிளமென்
வண்ணவிலை காட்டும் வதனத்தான் - அண்ணல்
வழுவை யடர்த்து வயங்கொளெறி பத்தர்
மழுவை யுவக்கு மழுவான் - பழவடிமைக்
கண்ணனையுஞ் சில்லோர் கடவுளெனத் தன்னொடும்வைத்
தெண்ணவழ னஞ்சயின்ற வெம்பிரான் - பெண்ணுருவம் (6)

பெற்ற வருளொடும்போய்ப் பெண்வலைப்பட் டுற்றதுயர்
அற்ற வறிஞ ரகம்புகுவோன் - முற்றவிரி
தத்துவமென் றாறாறுந் தாங்கடந்து போயறத்தில்
எய்த்தவர்க்குக் காட்டு மியல்பினான் -முத்தமணி
ஆற்றிற் பொருடிருவா ரூர்க்குளத்தி லன்றுசென்று
தோற்றப் புரியந் தொழிற்சித்தன் - ஏற்றுங்
கணையையமல ரென்று கருதா மதனைத்
துணையை விடுத்தெரித்த தோன்றல் - அணையும்
பிறப்புக் கிறப்புப் பெருமருந்து செய்யுங்
குறிப்புக் கரியமுது குன்றோன் - சிறப்பப் (11)

பெரியவரைச் சங்கம் பெறப்பந்தி சேர்த்து
விரிய விலைமுன் விரித்து - வரிசைபட
அன்னம் படைத்துமிசை யாங்கிடுவ விட்டருத்தி

மன்னும் பழுக்காய் வரவளித்துந் - தன்னந்
துறைபடுநர் சென்னியிற்றன் றோழமைவான் கங்கை
பொறைபடநன் றேறல் புரிந்து - முறைபடுமிம்
மண்ணின்மேல் வெற்பு வளமுடையே மிம்மடவார்
விண்ணின்மேல் வெற்பதுநா மேவுவமென் - றெண்ணிமேல்
கொங்கைக் கலவைக் குளிர்சந் தழித்தலைத்துக்
கங்கைப் புனலைக் கடுத்தெழுந்துங் - கங்கைக்குத் (16)

தானா யகமென்று தானதனா லெஞ்ஞான்றும்
ஆனா வினைக ளழித்திட்டும் - மானாகக்
கோடுங் கழையுங் குடவளையும் விண்முகடும்
நாடுங் கழையு நளினமலர்க் - காடுங்
கொடுத்த மணிபலவுங் கொண்டு தனக்கிங்
கடுத்த பெயரை யளித்தும் - படைத்த
பழகு புகழிப் படிமுழுதும் போர்ப்ப
ஒழுகுமணி முத்தா றுடையான் - முழுகுபவஞ்
சிந்தும் விவசித்துச் செய்பணிக்குக் காரணமாய்
வந்துமுத னின்றெழுங்காய் வன்னியான் - எந்தை (21)

6.5-10. பூமேவு செம்மல்-நான்முகன். பாமேவு மங்கை-கலைமகள். ஏ-அம்பு. யாணர்த் தவிசு-அழகிய இருக்கை. எகின் அரசு-நான்முகன். பொறி அரி-திருமகளையுடைய திருமால். மருவரிய-சேர்தற்கரிய. ஏய்-பொருந்தி. அ-அந்த. வழுவை-யானை. அடர்த்து-கொன்று. 11.10-15. ஆறாறும்-முப்பத்தாறும். முத்தமணியாறு-மணிமுத்த ஆறு. மதனை-காமனை. துணையை-இரதியை. 16.15-20. வரை-கீற்றமைந்த. சங்கம்-சங்குகளை. பெற-கூட்டமாக. பந்தி-வரிசை. அன்னம்-அன்னம் பறவை. வெற்பு-மலை. கடுத்து-ஒத்து. 21.20-25. நாயகம்-தலைமை. ஆனா-நீங்காத. கழை-கரும்பு. முகடு-முகட்டை. கழை-மூங்கில். காடு-தொகுதி. பழகு புகழ்-நீங்காத புகழ். படி-பூமி. விவசித்து-இவன் கோசலை நாட்டிலே மணிபிங்கலை நகரத்தில் அந்தண குலத்தில் தோன்றியவன். வறுமை மேலீட்டால் எங்குந் திரிந்தான். ஒரு காலத்தில் ஒரு தெய்வீகச் சுனையில் மூழ்கினான். அங்கே குபேரனுடைய தங்கையாற் கிடைத்த அணிகலன்களைக்கொண்டு கணநாதர் ஒருவர் உணர்த்தியவாறு, முதுகுன்றை யடைந்து உருவிலி வாக்கின்படி உரோமச முனிவருடைய அருளைப்பெற்றான். அருந்தவம்

புரிந்து பழமலைநாதருடைய கட்டளையின்படி அணிகலன்கள் வைக்கப்பட்டிருந்த வன்னி மரம் வேண்டிய பொருளைக் கொடுக்க அரிய திருப்பணிகள் பலவும் செய்து வீடுபேற்றையடைந்தான் என்பது விருத்தாசல புராணம்.

அருந்தவர்க ளென்று மமரரென்றும் பேரிட்
டிருந்தவர்க ளெல்லா மிரப்பப் - பொருந்தி
முனியா தவர்க்குவர முற்றங் கொடுத்திங்
கினியார் வரவென் றிருப்பான் - நினையாமல்
வேத வுணவு வெறுத்துப் புகழ்மூவர்
ஓதுதமி ழூணுக் குழல்செவியான் - தாதையிகழ்
காலிற்குத் தக்க கணிச்சிகைச் சண்டிசொரி
பாலிற்குத் தக்க பழமலையான் - சாலிக்குக்
கைக்கரகத் துற்றிழியுங் காவிரிபோற் சென்றுநறுஞ்
செக்கரிதழ்த் தாமரையின் றேன்பாய - வக்கமல (26)

ஏடு கனலா யிடுபசும்பொ னொண்பொகுட்டாய்
மூடு கரியரியாய் மொய்த்ததடம் - பீடுபெற
ஞாலங் கருதுஞ்செஞ் ஞாயிற் றிரும்பகன்மால்
கோலங் கருதுங் குளிர்பொழில்வாய்க் - காலங்
கருதி யிருளிருப்பக் கட்செவிமா ணிக்கம்
பரிதியென நின்று பருகக் - குருதிபுரை
சேயொளிய பூண்மணிசூழ் திண்சுவர்முற் றுங்கவரின்
வாயி றெரிபளிக்கு மாடமுறத் - தூயசுதை
மாடநம் பிக்கு வழிவிடுவான் விண்ணெழுந்து
நீடு புனல்போல நின்றிலங்கப் - பாடநகர் (31)

26.25-30. அமரர்-தேவர்கள். முனியாது-சினவாமல். இனையாமல்-வருந்தாமல். தமிழ்ஊண்-தேவாரப் பாடல்கள். உழல் செவியான்-ஏங்குகிற காதுகளையுடையவன். கணிச்சி-மழு. சண்டி-சண்டேசுரர். சாலி-நெற்பயிர். செக்கர் இதழ்-சிவந்த இதழ். கமலம்-தாமரை.31.30-35. பொகுட்டு-தாமரை மொட்டு. அரி-வண்டு. பீடுபெற-பெருமையை அடைய. கருதும்-எண்ணும். பரிதி-கதிரவன். குருதிபுரை-உதிரத்தைப்போன்ற. சேயொளி-செந்நிற வொளி.

இந்திரனுக் கன்றிங் கெனக்கென்று வேளசைத்த
பைந்தழைய தோரணம்விண் பாலசைய - வந்தணையில்
நாயகனா னீக்குதுயி னங்கை விளக்கவிப்ப
மேய மணிப்பூண் விளக்கேற்றச் - சேயிழையார்
முன்றிற் றுகண்மாற்ற மொய்குழலிற் பூந்தொடைகள்
அன்றித் துகளா லதுநிரப்ப - மன்றில்
கொழுநன்சொன் மாதுகிளி கூறா தடக்கப்
பழகுமயற் பூவை பகர - வெழிலி
மறைத்திருந்து செல்லமணி மாளிகையை வேத
முறைத்திருந்து தீப்புகைபோய் மூட - நறைத்திருந்து (36)

செந்தா மரைநாதன் றேரிற் பதாகையொடு
நந்தா மதிற்கொடிக ணட்பாடப் - பந்தாடும்
மங்கையர்கள் செங்கை வளையொலிப்ப வேர்மலியும்
வெங்கை நகரிருப்பு வேண்டியே - பங்குபடு
பெண்ணாசை நம்பிபசும் பொன்னாசை பெற்றவுளம்
மண்ணாசை தானு மருவுதலால் - விண்ணாசை
கொள்ளுஞ் சிறப்புக் கொடுப்பத் திருவுளங்கொண்
டெள்ளுங் குறியவுரு வின்றுபொய்த் - தெள்ளுங்
கனவு நனவுபோற் காட்டி யிரந்து
மனைவியுமை யோடு மணந்து - வினவினர்க்குப் (41)

பண்டை யறத்தின் படிவமிது வென்னவுருக்
கொண்டவிலிங் கையன் குலமைந்தன் - உண்ட
படிதாங்கி மாயன்றேர்ப் பார்தாங்கி யாங்கெம்
குடிதாங்கி நல்லிசைமென் கோதை - முடிதாங்கு
கல்வி யுறநீல கண்டன் றுணைவனலர்ச்
செல்வி யுறையுந் திருமார்பன் - வல்விரகம்
பூண்ட மடந்தையரே பொல்லா னெனுநல்லான்
தூண்டு திகிரிச் சுமைதுறந்தான் - யாண்டும்
இலையென்றல் கேட்பவுமின் னாதென் றிரப்போர்
நிலைகண்டாங் கெப்பொருளு நேர்வோன் - அலையுண்டு (46)

36.35-40. பைந்தழைய-பசிய தழைகளாலாகிய. பூண் விளக்கு-அணிகலன்களின் ஒளியே விளக்காக. அன்றுதல்-பகைத்தல். 41.40-45. செந்தாமரைநாதன்-கதிரவன். நந்தா-கெடாத. ஏர்மலியும்-அழகு மிகும். பங்குபடு-பழுது பொருந்திய. படிவம்-வடிவம். 46.45-50. நீலகண்டன்-கரிய கழுத்தையுடைய சிவபிரான்-விரகம்-காதல்.

பாலாழிக் கின்றுநிலை பான்மதிக்கென் றொப்பிகந்து
தோலா துலகனைத்துஞ் சூழ்புகழான் - மேலாய
செங்கமல வாணற்கே செந்நாவின் மேவுதல்வெண்
மங்கையெனு மவ்வுரையை மாற்றியே - சங்கையற
மூவுலகு ளோர்க்குமுதுசீர்த்தி வெண்மங்கை
நாவுறைய வைத்த நலத்தினான் - தேவிகலி
வந்துதன்சீர் பாடுநரை மண்மீதி லந்நிலையே
இந்திரன்றா னாக்கு மியல்பினான் - நிந்தையற
உண்டு பணையலரென் றொண்காவைக் கீழ்ப்படுத்திக்
கொண்டு புரைதீர் கொடையினான் - கண்டுபுகழ் (51)

பண்பு மலாது பயனும் புணர்ந்துநிதித்
தண்பதுமம் வென்ற தடக்கையான் - வண்புலவர்
தம்மைவிழி காக்குந் தகவி னிமைபோலச்
செம்மை பெறக்காக்குஞ் சீருடையான் - மெய்ம்மைபெற
நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்டால்
எல்லார்க்கும் பெய்யுமழை யென்றுமுனஞ் - சொல்லாடும்
ஐய மகல வகிலமெலாந் தற்சுட்டிப்
பெய்யுமழை யென்னும் பெயராளன் - துய்ய
மறையோர் மிடிப்பகைஞன் வாய்மைநா மென்றும்
அறையோ மெனப்பொய் யறைவான் - முறையோதி (56)

வேலிபுறஞ் செய்ய விளைத்துக் கரும்பயிலக்
கூலி கொடுக்குங் குலத்தோன்றல் - மாலிரவும்
ஆர்த்தி விருந்தா லடையாக் கதவழகு
மாத்திரையாய் நின்றொளிரும் வாய்தலான் - பூத்தபொருள்
ஏதப் படாம விருந்துதவ நல்லறமென்

பூதப் படியுட் புதைக்கின்றோன் - வேதன்
நிலம்பெயர்த்து வைத்த நெடுவேரிற் சென்னி
குலம்பெயர்த்து வைத்த குணத்தான் - தலம்படைத்தோன்
கண்ட குலத்திற் கருதி னிரட்டியாம்
பண்ட குலத்தின் பயனானான் - மண்டலிகர் (61)

நல்லகோ லின்று நவைக்கோ லெனச்செயுங்கோல்
வல்லகோ லண்ணா மலைவள்ளல் - மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழற்புதவணித்தா - முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயி லுள்ளிருந்தெம்
பையுள்போக் கிற்கும் பரஞ்சோதி - மையுள்
இருந்தபுன் மாக்கடமை யென்றுந் துதியா
வரந்தரவென் முன்னின்ற வள்ளல் - வரைந்தவிடை

## பவனி

தன்மதியி லென்றூழ் தனதுமதி காட்டியறப்
பொன்மலியுங் கப்பம் புகவேற்றிச் - சொன்மலியும் (66)

51.50-55. பாலாழி-பாற்கடல். தோலாது-தோற்காமல். செங்கமலவாணன்-நான்முகன். பணை-கிளை. புரைதீர்-குற்றம் போக்கிய. 56.55-60. நிதித்தண்பதுமம்-பதுமநிதி. தடக்கை-பெரிய கை. மிடிப்பகைஞன்-வறுமைக்குப் பகையாக இருப்பவன். 61.60-65. அயில-தின்ன. ஆர்த்திவிருந்து. மகிழ்ச்சியை உண்டாக்கும் விருந்து. சென்னி-சோழன். வாய்தல்-வாசல். ஏதம்-குற்றம். 66.65-70. பையுள்-துன்பம். மையுள்-மயலுக்குள்.

இந்திரனு மேனோரு மேத்தத் திருவுலா
வந்தருளு நல்விழவுண் மற்றொருநாள் - சந்தமறை
முன்னூல் வடிவுகொடு முந்நூல் புனைந்தன்ன
பொய்ந்நூ றருமறையோர் போந்தெள்ளின் - நெய்ந்நூறு
மாமஞ்ச ணெல்லி வருமானைந் தையமுதம்

ஏமந் தருநெய் யிளவெந்நீர் - தேமுந்து
வில்வநீர் கர்ப்புரம்பால் வெண்டயிர்செந் தேன்கரும்பின்
செல்வநீர் பல்கனியின் றீஞ்சாறு - நல்லிளநீர்
சந்தன மென்பனிநீர் சங்கப் புனன் முதலா
வந்தன கொண்டுதிரு மஞ்சனத்தோ - டுந்துதிரைக் (71)

கங்கை நிறந்திரியக் கன்னிப் பிறைதிகைப்பப்
பொங்கி யலைத்துப் புறம்போந்து - செங்கயல்கள்
பாயுந் தடமாப் படர்சடைமீ தாட்டியபின்
ஏயுங்கற் பான்மலைமா னெள்ளாத - மாயும்
புலியுரி மாற்றிப் புனைமணிய பாம்பின்
மெலியுரி யன்னதுகில் தேய்ந்து - வலிகெழுநற்
பஞ்சவ னென்ன முடிசூட்டிப் பார்வைக்கீழ்ச்
செஞ்சுடர்ப்பொற் றட்டிற் றிலகமுமிட் - டுஞ்சனிகர்
காதிற்குந் தோளிற்குங் கண்டமணிப் பூணென்னச்
சோதிக் குழைகள் சுமப்பித்து - வாதிப்பில் (76)

உண்ட வழனஞ் சொழுகிப் பரந்ததெனக்
கண்ட முழுதுங் கருஞ்சாந்து - கொண்டணிந்து
பொன்னனையார் நெஞ்சியங்கப் பூங்கலவைச் சேற்றிலிடுங்
கன்னிரைபோன் முத்தவடங் கைபுனைந்து - தந்நிகர்மைந்
நாக நினைவுவர நாறு மலர்த்தாமம்
ஆக முழுது மணிந்திட்டுப் - பாக
மதிய மணியிழைத்து வைத்தன்ன செம்பொற்
புதிய மதாணி புனைந்து - நிதியவணி
மாத்திரைதா னன்றி வளைவடுவுங் காக்குமெனச்
சேர்த்தினர்கே யூரந் திகழ்வித்துச் - சாத்தியபூண் (81)

71.70-75. சந்தமறை-இசைவடிவான மறை. முந்நூல்-முப்புரிநூல். ஆனைந்து-ஆக்களின் ஐந்து பொருள். ஐயமுதம்-பஞ்சாமிர்தம். சங்கப்புனல்-சங்குநீர். 76.75-80. வேய்ந்து-உடுத்து, குழைகள்-குண்டலங்கள். 81.80-85. அழல்நஞ்சு-தீயைப்போன்ற நஞ்சு. முத்தவடம்-முத்துமாலை. கைபுனைந்து-அழகு செய்து. பைந்நாகம்-படத்தையுடைய பாம்பு. மலர்த்தாமம்-மலர்மாலை. ஆகம்-உடல். மதாணி-மார்புப்பதக்கம். கேயூரம்-தோளணி.

என்ன மழுமா னியைந்த விரலல்ல
மன்னமணி யாழி மலிவித்துத் - தன்னொழியக்
கைசெய்த வீரக்குக் கட்டியதாய் முற்றாமல்
மொய்செய்த காலன் முரண்முருக்கி - மைசெய்த
மேனி யரக்கன் விறலோர் கணத்தழித்து
வானி னடுத்த மதிதேய்த்துத் - தானுடைய
வென்றிக் கணிந்ததென வீரக் கழனோன்றாள்
ஒன்றிக் கிடப்ப வொளிர்வித்து - மன்றற்
புகைமுதனின் றேந்திநறும் பூங்குவளைத் தீப
வகைமுதல் கொண்டுபணி மாறித் - தகைமை (86)

வலக்க ணிடப்பா லிடக்கண் வலப்பாற்
கலக்க நிழலாடி காட்டி - நிலக்கலமும்
பொற்கலமு மன்ன மறையும் புகழ்மூவர்
சொற்களையு மொத்துத் துதிப்பவிருந் - தற்கதிர்தன்
அங்கந் திரண்டமுத தாரையொழுக் கானதெனத்
தங்கு மணிப்பிடிய சாமரைகள் - அங்கசையச்
சாந்தாற்றி பேர்முரணித் தாமரைமுத் தன்னவெயர்
போந்தாற்றி ஞாங்கர்ப் பொலிவெய்த - வேந்தாற்றற்
பிள்ளை மதியினைமுன் பெற்றெடுத்த தாய்மதிபோல்
வெள்ளை மணிக்கவிகை மேனிழற்றத் - தொள்ளைவளை (91)

ஒன்றா யிரம்வா யொலிக்கு மவைபோன்று
சென்றா யிரமெண் டிசைவிழுங்கக் - குன்றாத்
திரண்டா யிரங்கை தெழிக்குமது போற்கை
இரண்டான் முழவொன் றிரங்க - மருண்டார்நல்
தந்திகரங் கொண்டதென நற்றண் ணுமைமுழங்கச்
சந்தமறை யோன்விழையுந் தாளங்கள் - முந்ததிரக்
கண்ணன் மலர்வாய்க் கழையெறிந்து பின்றொடர
வண்ண விசைக்குழல்கள் வாய்த்தொலிப்ப - மண்ணியங்கள்
ஏனையபா தாளத் திறையரவும் விண்ணரவும்
வானுருமே றென்ன மலிந்தார்ப்ப - மீன (96)

86.85-90. மன்ன-பொருந்த. முரண் முருக்கி-வலிமையை அழித்து. மதி-திங்கள். நோன்றாள்-வலிமை பொருந்திய திருவடி. 91.90-95. நிழலாடி-கண்ணாடி; நிலக்கலம்-மண்ணாற் செய்தகலம். பொற்கலம்-பொன்னாற் செய்த கலம். மறை மண்பாத்திரமும் தேவாரம் பொன் பாத்திரமும் போன்றதென்க. “பூசுரர் நான்மறை மட்கலநிகர்க்கும்” என்பது நால்வர் நான்மணிமாலை. கவிகை-குடை. நிழற்ற-நிழலைச் செய்ய. 96.95-100. முழவு-மத்தளம். தண்ணுமை-ஒலிக் கருவிகளில் ஒன்று. கழை-வேய்ங்குழல். உருமேறு-பேரிடி.

அலைப்புதல்வி போற்றபெரி யம்மைப் பெயர்கொள்
மலைப்புதல்வி தன்கொழுநன் வந்தான் - தொலைப்பில்
முதுகுன்றம் வெங்கையென முன்னுங் கருணை
மதகென்ற கண்ணுடையான் வந்தான் - இதுகுன்றம்
என்னு மழவிடையான் வந்தா னெனக்கோடி
சின்ன மமுதஞ் செவிக்குகுப்ப - மன்னுசிவ
செந்துவர்வாய் மங்கைபங்க தேவாதி தேவவென
வந்திகர்நின் றார்க்குமொலி வானளப்பப் - பந்திமணி
மாடக் கரைசேர் மறுகிலஞ்சி மன்பதையா
நீடப் புதுநீர் நிறைந்தொலிப்ப - ஆடச் (101)

சிலர்செந் தழற்கொழுந்து சேட்போய் விழல்போற்
பலர்செந் துகிலெறிந்து பற்ற - மலர்சிந்தி
உம்பர்மே னிற்ப வுலகநெருக் கரலுயர்த்த
தம்பதுமக் கையெளிதிற் றாங்குவிப்பச் - செம்பொனெடுந்
தண்டுமிசை கொண்டு சகமீன்றா டன்னையுடன்
கொண்டுமணி வீதி குறுகியே - பண்டு
சிலையாகி நொய்துபட்ட தீதகல மேரு
மலையாகி நின்றவா வந்த - நிலையாகி
நாரணனாய் விண்ணுயர்வா னன்னிறத்தாற் செங்கமல
ஆரணனாய் மிக்க வணியினால் - வாரணனாய் (106)

நின்ற பசும்பொ னெடுந்திருத்தேர்க் கண்டுவந்து

மன்ற விளங்கதிர்போல் வந்தேறி - வென்றிதரு
தந்தி முகன்முருகன் சங்கரிநற் சண்டியிவர்
தந்த மரபிரதந் தாங்கடவி - வந்தணையக்
கட்டளைக்கற் பொன்னுரைபோற் காற்பொன் மறுகுரிஞ்ச
முட்டிமுடிப் பொன்விண் முகடுரிஞ்சப் - பட்டுடைத்தேர்
கண்டோர் விழிகள் களிப்ப நிலைபெயர்த்துத்
திண்டோ ளிறைவன் செலுத்துதலும் - பண்டோர்

## குழாங்கள்

சிரந்துணித்தா னோடமர்ப்பச் சென்மதற்கு வேதன்
இருந்து படைத்தபடை யென்னத் - திருந்திழையார் (111)

101.100-105. 106.105-110. சேண்போய்-தொலைவிற்போய். உம்பர்-தேவர்கள். சிலை-வில். நாரணன்-திருமால். செங்கமல ஆரணன்-நான்முகன். வாரணன்-இந்திரன். 111.10-115. கட்டளைக்கல்-பொன்னுரைகல். காற்பொன்-தேர் உருளையின் பொன். மறுகு-தெரு. முடிப்பொன்-தேர்முடியின் பொன். முகடு-விண்முகடு. சிரந்துணித்தான்-நான்முகனுடைய தலையைக் கிள்ளியவன். அமர்ப்ப-போர் செய்ய. இருந்து-எண்ணி.

முற்றினர்முற் றாதமுலையிற் பெருவாழ்வுஞ்
சிற்றிடையி னல்குரவுஞ் சேர்ந்துளார் - முற்றும்
அமைக்க நிகர்தோ ளணங்கா தலைத்தம்
பிமைக்கம் விழியா லிறுப்பார் - சுமைக்கு
வருந்து நுசுப்பென்று வாணுதலிற் றீட்டுந்
திருந்து திலகஞ் சிதைப்பார் - பரந்தளிமி
றூதித் திரியும் பலமலரி னொண்மணம்போல்
பேதித் தமையுமிகு பேரழகார் - மோதிக்
கிழியா முகில்சிதைக்குங் கேதனப்பொற் றேரோன்
அழியா வெரிதீ யழகை - விழியால் (116)

விழுங்கினா ரேது விளையா தினிமெய்
புழுங்கினார் மாலை பொரிந்தார் - செழுந்தரள
மாலை பொடிந்துவிழி வார்நீர் கலந்தொழுகிப்

பாலைபொழி யார்பா ரதிபோன்றார் - மேலைநாட்
கூற்றை முனிந்த குரைகழலு முப்புரத்தின்
ஆற்றல் களைந்த வணிநகையும் - போற்றிலராய்த்
தம்மைநோய் செய்த தறுகட் சிலைமதற்காய்
வெம்மை விழியே வியந்திடுவார் - செம்மைத்
தவங்கொண்டோ மாதுமையா டன்னழகு கொண்டோ
எவன்கொண் டிடமளித்த தென்பார் - தவங்கொண்டேல் (121)

ஆக வழகா லளித்த திடமாகில்
போகவிடே மென்றெதிர்தாம் போகுவார் - ஆகம்
மருவு மதினெண் மடங்கு பிறைப்பேர்
இரவி தனைமறைப்பி னென்பார் - பரவுறுபீர்
கன்றுபயிர் மேயக் கடாவின் செவியரிந்தாங்
கின்றுதலை வற்கா ணிணைவிழிகள் - நன்றிருப்பக்
கொங்கை யழகழியக் கொண்டதென்பார் கொல்பவர்க்குச்
சங்கரனென் னும்பேர் தகாதென்பார் - மங்கையுமை
கொங்கைவடுக் கண்டுங் குழியவுரம் பாயாத
எங்கண் முலைக்குவலி யில்லென்பார் - செங்குதலைப் (126)

116.15-120. முற்றினர்-வந்து திரண்டனர். அமை-மூங்கில். அம்பு இமைக்கும்-அம்பைப்போல் விளங்கும். இறுப்பார்-ஆடவரை வருத்துவார்கள். நுசுப்பு-இடை. ஞிமிறு-வண்டு. 121.120-125 பொரிந்தார்-தீயப்பெற்றார். பாரதி-கலைமகள். மெய்புழுங்கினார்-உடல் வருந்தினார். அணிநகை-அழகிய பல். 126.125-130. ஆகம்-மார்பு. இரவி-கதிரவன். குழிய-குழி விழுமாறு. உரம்-மார்பு.

பிள்ளைப் பழியாளர் பெண்பழியை யஞ்சுவரோ
எள்ளத் தனையேனு மின்றென்பார் - உள்ளுக்
குருகுவார் நெற்றிபுடைத் தோவிதியே யென்பார்
பருகுவார் போலிறையைப் பார்ப்பார் - முருகுவாய்
தங்கமுத மும்பெறார் தாழ்குழலிற் பூப்புனையார்
எங்கள் விழிக்கிவர்தாம் யாரென்பார் - பங்குவரும்
ஆர மணிமார் பணையக் கிடைத்தாலும்

பார முலைக்ககலம் பற்றுமோ - நேருகினுங்
கங்கையறி யாமற் கலக்கு மிமையமலை
மங்கையறி யாமல் வருவரோ - மங்கை (131)

அறியாமற் கங்கை யணையு மவரென்
நெறியால் வராரென்று நிற்பார் - குறியா
இணைவிழியா னோக்கா ரெனினு நுதன்மேல்
அணைவிழியா னோக்கினமா மென்பார் - கணைவிழியார்
ஏந்திளங் கொங்கை யிடைவருத்தன் மாத்திரையாய்ப்
போந்தன வென்று பொருமுவார் - நாந்தவஞ்செய்
தில்லோ மதனா லினையாம லென்செய்ய
வல்லோ மெனத்திகைத்தார் மற்றொருத்தி - நல்லோர்

## பேதை

பொதும்பர் வனம்யாம் புகவோ மிவடான்
பெதும்பையா முன்னமெனும் பேதை - குதம்பை (136)

விழிமேவுங் காதுதோண் மேவப் புனைவாள்
மொழிமேவும் வீணை முனிவாள் - பழிமேவுங்
கல்லார் பரன்முற் கரத்தல்போற் றன்கண்மூய்
எல்லார் முனுங்கரந்தே னென்றிருப்பாள் - பொல்லாத
வெம்பு பகையாகி மேல்விளைவ தோராமல்
அம்புலியை வாவா வெனவழைப்பாள் - செம்பொனுயர்
தெற்றிமிசை மென்னடைய தென்றல் வரவேற்றுச்
சற்றுமுள மஞ்சாது தங்குவாள் - பற்றுதவு
தன்பெருமை பொன்னறியாத் தன்மைபோற் பெண்ணரசாந்
தன்பெருமை தானறியாத் தன்மையாள் - பொன்பரிவின் (141)

131.130-135. பிள்ளைப்பழியாளர்-சீராளனைக் கொன்று பழி தேடியவர். பருகுவார்-எடுத்து விழுங்குபவர். ஆரம் மணிமார்பர் - மாலைகளையணிந்த அழகிய மார்பையுடையவர். அகலம்-இறைவருடைய மார்பகலம். 136.135-140. கணைவிழியார்-அம்பைப்போன்ற விழியை உடையவர்கள். பொருமுவார்-மனங்குமுறுவார்கள். இனையாமல்-வருந்தாமல். பொதும்பர்-

மரச்செறிவு; மரப்பொந்து. குதம்பை-காதணி. 141.140-145. பரன்-கடவுள். கரத்தல்-மறைத்தல். மூய்-மூடிக் கொண்டு. தெற்றி-திண்ணை.

ஒக்கலையிற் கொள்ளி னொளிர்பொன் மணியிருப்பிற்
றக்கவளல் லாரெடுக்கத் தக்ககிலாள் - மிக்க
வடிவழகுக் கேற்ற மணவாளன் றானெப்
படியுளனென் றாராயும் பண்பாள் - முடிவில்
உருவழிந்த வேளை யுரியனெனக் கூறும்
பொருவழிந்த வோர்கறையும் பூண்பாள் - திருவழங்கு
பொன்னே யெழின்முளையே பூங்கொடியே பெண்ணரசே
மின்னே மயிலே விழிமணியே - அன்னே
வருக வருகவென வாராது தாய்நெஞ்
சுருக வுருக வுழல்வாள் - பெருகறிஞர் (146)

நெஞ்சம் புரைய நிகழ்வுற் றொருசிறிதும்
வஞ்சம் புகாத மதர்விழியாள் - துஞ்சி
விழுந்த கதிரே யெழல்போல் விழுந்த
தெழுந்ததென வொக்கு மெயிற்றாள் - அழுங்கவுரம்
மீக்கா ணளவும் வெளிப்படா வுட்பகையை
நோக்காது வாழு நுசுப்பினாள் - சீர்க்காமன்
மாதரழுக் காற்றால் வடிவிழிவு காணாமல்
பேதை யெனவிகழும் பெண்பெருமாள் - காதலுளந்
தள்ளத் தமர்போற் றமரலா ரும்மகண்மை
கொள்ளக் கருதுங் குறியினாள் - பிள்ளைப் (151)

பருவத்தா லொத்துப் பகல்விளக்குப் பட்டாங்
குருவத்தா லொவ்வா ரொடுதான் - தெருவிற்போய்ச்
செங்கணெடு மாலுந் திசைமுகனு மீசனெனப்
பங்கமொழி கூறும் படியென்னச் - சங்கம்
பழிக்கும் வழுச்சொற் பதர்சேர்த்து வைத்த
இழுக்குங் கலியென்ப தென்னக் - கொழிக்கும்
புழுதியளைந் தில்லமெனப் போற்றிவிரற் கோலம்
எழுதிவிளை யாடி யிருக்கும் - பொழுதிலிசை

வேதச் சிலம்பு மிளிர்பதத்தான் மூவெயிலும்
காதச் சிலம்பு கரங்கொண்டான் - நாதப் (156)

பணையா னறிய பசுந்துழாய் நாக
அணையா னறிய வரியான் - துணையாய்
அடியவரைக் காக்கு மருளான் பனைக்கைக்
கொடியவரைக் காக்குங் கொலையான் -கடிகொள்
பனியிதழி மாலைப் படர்சடையான் வெற்பின்
கனியிதழி மாலைக் கழியான் - இனியநறுங்
காவிக் கரிய களத்தினா னெம்முடைய
ஆவிக் கரிய வமுதானான் - பாவித்
துருகு மகத்தை யுவப்பா னிகழ்வால்
அருகு மகத்தை யழிப்பான் - பெருகும் (161)

146.145-150. ஒக்கலை-மருங்கு. தக்ககிலாள்- தகுதியற்றவள். பொருவு-ஒப்பு. விழிமணி-கண்மணி. 151.150-155. புரைய-ஒப்ப. துஞ்சி-மறைந்து. எயிற்றாள்-பற்களையுடையவள். உரம் மீக்காண் அளவும்-மார்பின் மேலே காணும் வரையிலும். நுசுப்பு-இடை. காமன்மாதர்-இரதி. தமரலார்-உறவினரல்லாதவர். மகண்மை-மகளாந்தன்மை. 156.155-160. புழுதியளைந் தில்லமென-மணலாற் சிற்றில் இழைத்து. மூவெயிலுங்காத-முப்புரங்களையும் அழிக்க. சிலம்பு-மலைவில். 161.160-165. நாதப்பணையான்-இசை பாடும் வேய்ங்குழலையுடைய திருமால். துழாய்-துளசி. பனைக்கை-பனை போன்ற கைகளையுடையானை. கடிகொள்-மணங்கொண்ட. காவி-கருங்குவளை. பாவித்து-உள்ளத்தில் எண்ணி. உவப்பான்-மகிழ்வான். மகம்-தக்கனது வேள்வி.

உருப்பவள மாய வொருவ னிரதி
விருப்பவள மாய விழித்தான் - பொருப்புவளர்
மங்கைக் குழையாய் மழுத்தனக்கென் றேந்துவோன்
சங்கைக் குழையாச் சமைத்தபிரான் - வெங்கைப்
பழமலையா னாளும் பதியிலான் சீற்றம்
எழமலையா னாளு மிறைவன் - தொழமலையான்
வாழி யரம்பையர் தார் வண்டலயர் பேதையராப்

பூழி யெழுந்தளகம் போய்ப்படிய - ஆழிநெடுஞ்
செம்பொற் கொடித்தேர் திருமறுகி னூர்ந்துவர
அம்பொற் கொடிகுறுகு மன்னையரோ - டும்பர்க் (166)

கரியா னெதிர்சென் றவர்தாழத் தாழ்ந்து
பெரியா னிலைசிறிதும் பேதை - தெரியாமல்
அன்னைமீ ரித்தே ரமர்பவன்யார் மைந்தனிது
பன்னுகவென் றாடைமுதல் பற்றுதலும் - மின்னனையார்
வற்புறுத்த வோர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி யோதுந் துணிவுபோல் - தற்பதத்தால்
ஓதும் பிரமமொரு தானென்ப தொன்றனைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டினோன் - சாதம்
இவட்குநா மேதென் றியம்புவமென் றெண்ணித்
துவக்கும் வினைவழியாற் றோன்றும் - எவர்க்குமிவன் (171)

தந்தையே யன்றித் தனையனா காதவன்காண்
அந்தமில்சீர்க் காரைக்கா லம்மைதனை - முந்தொருநாள்
தப்பா வருளாற் றனக்கம்மை யென்றவன்காண்
அப்பா வெனுமொழியு மன்பினால் -துப்பார்
அயிலேர் மகன்மாட் டறிந்தவன்கா ணெங்கள்
மயிலே யெனவுரைப்ப மற்றும் - வெயிலேர்
இழையா ளிவனூ ரெவணுரையு மென்ன
உழையா ரிவனூர்நம் மூர்தான் - அழையாய்
விளையாட வென்று நகைத்து விளம்ப
முளையா முலையிளையாண் மோகங் - கிளையாள் (176)

166.165-170. விருப்ப-விருப்பத்தையுடைய. வளம்-காமன். குழையா-காதணியா. பதியிலான்- தனக்கொரு தலைவனில்லாதவன். மலையான்-போர் புரியாதவன். தொழ மலையான்-தன்னை வணங்குவோரிடம் மாறுபடாமலிருப்பவன். பூழி-புழுதி. 171.170-175. பெரியான்-பெரியவனாகிய கடவுள். பன்னுக-கூறுக. காதுபவம்-வருத்துகிற பிறவி. சாதம்-உண்மை. துவக்கம்-வலிக்கின்ற. 176.175-180. துப்பார்-வலிமை பொருந்திய. வெயில்ஏர் இழையாள்-ஒளிதங்கிய அழகிய அணிகலன்களை அணிந்த பேதை. எவண்-

எவ்விடத்தது. உழையார்-பக்கத்திலுள்ளவர்கள். முளையா-தோன்றாத. கிளையாள்-தோன்றாதவளாகி. படிவம்-வடிவம்.

படிவ நனிநன்கு பார்த்தா டவழும்
முடியி லிளம்பிறையு முன்னாள் - வடிவழகன்
கையி லளமானுங் காதலியா ளெம்பெருமான்
மொய்யகலம் வேய்ந்து முருகுயிர்க்குஞ் - செய்ய
கடுக்கையினைப் போதே கருத்தூழ் நடாத்த
மடக்கொடியிவ் வீசர்தோண் மாலை - அடுத்தெனக்கு
வாங்கி யுதவுமென மைக்கண் கலுழ்ந்துருகத்
தீங்கிலுமை பங்கன் றிருவிழவுள் - யாங்களிளம்
பேதையென வைப்பப் பெதும்பைச் செயலுமலால்
மாதிவளோர் மங்கைசெயன் மன்னினாள் - யாதினியாஞ் (181)

செய்யுஞ் செயலென்று சிந்தித் துளங்கலங்கிப்
பெய்யுஞ் சிறுவளைக்கைப் பெண்ணமுதே - ஐயன்
திருத்தார் நினைக்கிரத்தல் செய்தும் புனைதற்
குரித்தா மூலைவந் துரத்திற் - பருத்தாலென்
றோதிக் கலுழ்கை யொழித்தா ரிவளன்று
பேதைப் பருவம் பெறுகையால் - ஆதிப்
பெருமான் விடுத்தகன்றான் பேரருளால் பாகத்
தொருமா னிவட்பார்த் துவந்தாள் - பொருமாரன்
நூறடுத்த கோடி நுனைப்பகழி கொண்டாலும்
மாறிவட்கென் செய்வான் வறிதகன்றான் - வேறொருத்தி (186)

## பெதும்பை

சீர்க்கு மிறைஞராந் தேன்முரலும் போதாகப்
பார்க்கும் பெதும்பைப் பருவத்தாள் - யார்க்குந்
தனைக்காணில் வாய்நீர் தரும்புளியி னுண்மால்
தனைக்காணி னல்குமொரு தையல் - நனைக்காமம்
உள்ள மரும்ப வுணர்வுடைய யோகிகட்குங்
கள்ள மரும்புகயற் கண்ணினாள் - கொள்ளுந்
தகவையிரு பங்காக்கித் தாமிருப்பக் கண்கள்
முகவினடு விட்டசுவர் மூக்காள் - மிகவும்

புரிந்தநெடுங் கூந்தற் பொறைவருமுன் னாணால்
வருந்துநறுஞ் சந்த வளையாள் - திருந்த (191)

181.180-185. மொய் அகலம்-வலிய மார்பு. வேய்ந்து-அணிந்து. முருகுயிர்க்கும்-மணத்தை வெள்ப்படுத்தும். கடுக்கையில்-கொன்றை மாலையில். கருத்து-கருத்தை. ஊழ்-ஊழ்வலி. மடக்கொடி-பேதை. கலுழ்ந்து-அழுது. மன்னினாள்-பொருத்தினாள். 186.185-190. செய்தும்-செய்கிறோம். உரத்தில்-மார்பில். கலுழ்கை-அழுகை. ஒருமான்-மானைப்போன்ற பெரிய நாயகி. நுனைப்பகழி-கூரையுடைய கணை. மாறு-மாறுபாடு. வறிது-வீண். 191.190-195. முரலும்-ஒலிக்கும். கொள்ளுந்தகவை-எல்லோரையும் வருத்துதல் முதலிய பெருமையை. வளையாள்-கழுத்துடையவள்.

195 மனங்குழைக்கும் பெண்வளர்த்தான் மானக் குதம்பை
கனங்குழைக்கு நல்கும்வார் காதாள் - முனங்குழைக்கும்
மண்விடுத்துப் பூசு மணங்குழைப்பாண் முன்பிறழ்ந்த
எண்விடுத்துச் செவ்வ னியம்புவாள் - பெண்விடுத்துப்
பூமங்கை யாணவாம் பொற்பினாள் கல்விகொடு
பாமங்கை தாளிற் பணிகுவாள் - காமன்றன்
வல்லியிவள் போலுமவள் வாட்போலுங் கண்ணினள
வில்லைபுகுந் தாயி னெனப்படுவாள் - மெல்ல
இடையயிரா தாழி யெழுங்கதிர்முன் றோன்றும்
முடி நுனிபோற் றோன்று முலையாள் - அடியழகு (196)

200 பூழி யழிப்பப் புறந்திரியா டற்போற்றுந்
தோழியர்நூ றாயிரவர் சூழ்ந்துவரக் - கேழின்
நிலைய வுறுப்பு நிகரா தவற்றின்
வலைய மலைப்ப மனங்கொண் - டிலகிலஞ்சி
சென்று புகுந்துவளர் சில்லோதி தன்பகையாம்
என்றுநெடும் பாசி யிடையொதுங்க - மன்றனறுங்
காவிவிழி கண்டுகுப்பக் கண்ணீர் குழைபகைத்த
ஆவிபடர் வள்ளை யடிதுடக்கத் - தூவிதழ
ஆம்பன் மலர்வா யதுகண்டு வாய்திறப்ப
மேம்பல் வளைகழுத்தால் வீழ்ந்தொளிப்பக் - கூம்பல் (201)

முகைகண்டு தாழ முலையை முழந்தாட்
பகைகண்டு ஞெண்டளைகள் பார்ப்பத் - தகைகொண்டு
வாய்ந்தகணைக் காற்கு வராலிரியத் தாட்புறக்குப்
போந்த கமடம் புறங்காட்டக் - காந்தளுடை
தன்னெதிர்கஞ் சஞ்சிவந்து சாயாது நிற்பக்கை
அந்நிலையிற் கொய்தாங் கதுபற்ற - மின்னனையாள்
ஆடவரோ டாடினா ளாகப் புனலாடி
மாட மணிமறுகில் வந்துறலும் - நீடு
கரும்பு மலருங் கலந்துவிழை வாக்க
விரும்புமதன் போன்மூலை வீதி - திரும்பிப் (206)

196.195-200. முனம்-பேதைப் பருவத்தில். பூமங்கை-திருமகள். ஆணவாம்-ஆண் தன்மையை விரும்பும். பாமங்கை-கலைமகள். அயிராது-ஐயப்படாமல். 201.200-205. கேழில்-உவமையில்லாத. இலஞ்சி-தடாகம். சில்லோதி-சிலவாகிய கூந்தல். காவி-கருங்குவளை. உகுப்ப-சிந்த. வள்ளை-வள்ளைக்கொடி. ஆம்பல்-செவ்வல்லி. 206.205-210. ஞெண்டு-நண்டுகள். அளைகள்-வளைகள். வராலிரிய-வரால் மீன்கள் அஞ்சியோட. தாட்புறக்கு-புறவடிக்கு. கமடம்-ஆமை. புறங்காட்ட-தோற்றோட. காந்தள்-காந்தள் மலரும். உடை-தோல்வியடைய. கஞ்சம்-தாமரை. சாயாது-தோல்வியடையாமல். ஆடினாளாக-கலந்தவளைப்போல. மணிமறுகு-அழகிய தெரு.

பரிதிநெடுந் தேர்வருதல் பார்த்தவக லல்குல்
இரதியெனத் தானுமெதி ரேற்றாள் - கருதின்
அரிய நுதற்க ணரசையருள் காட்டுங்
கரிய மிடற்றமுதைக் கண்டாள் - உரிய
இறைவற்குத் தக்காங் கிறைஞ்சினா ணூலின்
முறைமுற் றிரத முதல - குறைவற்ற
மல்கு விழிவார வாரத் தகப்படா
தொல்கு மருங்கி லுமைமங்கை புல்குந்
திருத்தோளிற் கண்வழிதன் சிந்தைபோய்க் காம
எரித்தோற்ற மெய்துறுமவ் வெல்லை - உருத்தோர் (211)

பெருநாண் டடுத்துப் பிணைவிழியு ணீருங்
குருநாண் மலர்க்கைக் குருகும் - அரநாண்
அகல்கின்ற வல்குலிற்பட் டாடையுநிற் பிக்கப்
புகல்கின்றா ளிம்முளரிப் பூவைப் - பகல்குன்றச்
சோதி தருமிவற்குச் சூட்டியக்கான் மற்றிவன்றான்
ஏதுதரு நல்கு மெனக்கென்ன - ஓதி
பெருகொருத்தி சென்றருகு பெண்ணணங்கே யின்பம்
பருகற் கிரண்டாம் பதமாம் - அருகிருத்தல்
ஈந்தருளு மென்ன விறைவி யருகிருப்பு
வாய்ந்த முதற்பதமா வைத்தெண்ணிப் - போந்த (216)

மனக்களிப்பு மல்கிமலை மாதையஞ்சி யீசன்
தனக்களிப்ப வெண்ணுமலர் தன்னை - நினக்களிப்பன்
என்ன வவடா னிவண்மனம்பே தித்ததெனாக்
கன்ன லனையமொழிக் காரிகையே - பொன்னிரதம்
மங்கை முலைகளோ வள்ளறடந் தோள்களோ
இங்கிவையி னல்ல வியம்பென்ன - அங்கவளுங்
கூறாது தன்கடைக்கண் கோமான் புயத்துறுப்ப
வேறான துள்ளமெனன் மெய்யென்று - தேறாக்
கொலைமாலை வேற்கணாட் கொண்டுமட மாதர்
தலைமாட வீதியய னீங்கச் - சிலைமாரன் (221)

211.10-215. எதிரேற்றாள்-எதிரே சென்றாள். விழவு-திருவிழாவின். ஆரவாரத்து-ஆரவாரத்தில். ஒல்கும்-அசையும். புல்கும்-தழுவும். காமஎரி-காமத்தீ. உருத்து-சினந்து. 216.15-220. குரு-செந்நிறமமைந்த. குருகு-வளையல். அர-பாம்பும். நாண்-நாணுகின்ற. முளரிப்பூவை-தாமரை மலரை. ஓதி-அறிவு. 221.20-225. மல்கி-மிகுந்து. பேதித்தது-மாறுபாட்டையடைந்தது. கன்னல்-கரும்பு. உறுப்ப-தாக்க. கொலைமாலை வேற்கணாள்-கொலை செய்யுந் தன்மையையுடைய மாலையணிந்த வேற்படை போலுங் கண்ணையுடையவள். எய்ய-கணை செலுத்த.

கிட்டிக்கொண் டெந்தைமுன்செல் கின்ற விநாயகற்குக்
குட்டிக்கொண் டெய்யநாட் கொண்டகன்றான் - சுட்டிக்கொண்
டொப்பாக வோதற் கொருபொருளு மில்லான்றேர்
அப்பான் மறுகி னடைந்ததால் - இப்பால்

## மங்கை

இலர்போ லவாவி யிசையளிக ளுண்ணாண்
மலர்போன் மலர்செவ்வி மங்கை - அலர்போ
தலைமங்கை செய்யா ளறவுங் கரியாள்
மலைமங்கை சாலவுமென் மங்கை - கலைமங்கை
வெள்ளை யவட்கருத வேண்டா வெனுமங்கை
கள்ளை விடுத்துமதங் காண்மங்கை - கிள்ளைமொழிச் (226)

செந்திருமென் கொங்கை திருமா றிளைக்குங்கால்
புந்திதனிற் கொள்ளும் பொலிவினாள் - இந்திரன்றன்
ஆக்கத் தினைவிழையா வாற்று மருந்தவங்கள்
நீக்கித் தனைநினையு நீர்மையாள் - சீர்க்கமல
ஆதியயன் மீக்கூ ரரம்பையரை யாக்குங்கால்
மாதிரிகை யாகவுனும் வாய்ப்பினாள் - சோதிமணி
அன்று சுடரோன் றமைந்த மனைபுகினுங்
கன்று தளிர்மெய்க் கவினுடையாள் - இன்று
திருத்தேர் விழாவென்று சேடியர்க ளீண்டி
மருத்தே ரளிசூழ் மலருந் - திருத்தேர் (231)

இழையுந் துகிலு மெனைத்துங் கொணர்ந்து
விழையும் படியணிய வேண்டக் - குழையும்
மனத்தொடுமென் றூசு மணிமே கலையாம்
இனத்தொடு சேரவுடுத் திட்டுச் - சனித்தவிடம்
முற்றுங் கவரா முகிண்முலைமுன் றானையால்
முற்றுங் கருணைகொடு மூடினாள் - முற்றும்
புருவவணி மாறாப் பொருவிழிக்கு மையிட்டு
உருவ மதியை யுவந்து - மருவுமொரு
பைத்த நெடியகரும் பாம்பென்னப் பின்னுபுமுன்
வைத்த குழலின் மலர்புனைந்தாள் - மொய்த்தபுகழ் (236)

226.25-230. இலர்-வறுமையுடையவர். நாள் மலர்-அன்றலர்ந்த மலர். அலைமங்கை-திருமகள். அறவுங்கரியாள்-மிகவுங் கருமையானவள். 231.230-235. ஆக்கம்-செல்வம் ஆற்றும்-செய்யும். நீர்மையாள்-தன்மையுடையவள். ஆதி-எண்ணிக்கையில் முதலாகிய. மீக்கூர்-தெய்வலோகத்துள்ள அழகுமிகுந்த. மாதிரிகை-மாதிரி. உனும்-எண்ணுகின்ற வாய்ப்பினாள்-மாட்சிமையுடையவள். கன்று-கைகின்ற மருத்தேர்-நறுமணத்தை ஆராய்கின்ற 236.235-240. இழை-அணிகலம். துகில்-ஆடை. விழையும்படி-விரும்புமாறு. குழையும் மனம்-கனிந்த உள்ளம். முகிள்-முகிழையொத்த. பொருவிழி-காதோடு போர் செய்கின்ற விழி. பைத்த-படத்தையுடைய.

ஈசற்குத் திங்களொன்றே யென்றுகதி ரும்பிறையும்
வாசக் குழன்முன் வகுத்தணிந்தாள் - நேசத்
திலக மதிக்கிழிந்த சிற்றரவ மென்ன
இலகமணிச் சுட்டிபுனைந் திட்டாள் - கலகமிடக்
கண்ணிற்கு வேள்விடுத்த வோலையெனக் காதிற்கு
வண்ணப்பொன் னோலை வதிவித்தாள் - நண்ணி
முயங்கு முரோணி முழுமதியோ டென்ன
வயங்குகொடி மூக்கார மாட்டி - உயங்கியயல்
ஏனை மதிமாத ரெல்லா மிருப்பதென
ஆனமணி மாலைகழுத் தார்வித்தாள் - மானவளை (241)

காக்க மணிபொற் கடகங் கரஞ்செறித்துச்
சேக்க வடியிற் சிலம்பணிந்தாள் - நோக்கமுதம்
அன்னா ளொழிந்த வணிபலவுந் தாங்கினாள்
பொன்னா லியன்றவுருப் போன்றமைந்தாள் - பின்னால்
உருப்பசி யன்ன வொருத்தி யளிப்பக்
கருப்புரமென் பாகு கவுட்கொண் - டிருப்பவொரு
மாது குறுதி மயிலேபொற் றேரொடுநம்
வீதிதனில் வந்தான் விமலனென யாதும்
வருவதுண ராமன் மகிழ்ந்தெழுந்து நங்கை
பொருவதரும் வீதி புறப்பட் - டுருவதிலி (246)

250 உற்றபெருந் தானையென வுண்கண்ணு மொண்கவுளும்
பற்றுபுகர் வாளும் பரிசையுமாம் - முற்றிழையார்
எண்ணிலா ரீண்டி யிருமருங்கும் போற்றிவரத்
தண்ணிலா வேணியரன் றன்னெதிர்போய் - அண்ணல்மேல்
வண்டு மலரென்னும் வார்சிலையி னேர்தொடுத்துப்
பண்டுமத னெய்த பரிசென்னக் - கொண்டு
விலங்க விழிப்பகழி விற்புருவ மேற்றி
இலங்க வருமிறைதோ ளெய்தாள் - கலங்கலரும்
அண்ணறான் யோகநிலை யன்மையாற் றன்பரிதிக்
கண்ணினா னோக்கவெரி காமத்தீ - ஒண்ணுதலாள் (251)